உலகத்தமிழ்
உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை வழங்கும் மின்னிதழ்

# என் காதலே

அனு பாசில், ஹாங்காங்

பூக்களின் முகத்திரை. பாவை உடுத்திருக்கும் பச்சை வண்ண புடவை. வண்ண கோலங்கள் நிறைந்த கைகள். மெட்டிக்கு காத்திருக்கும் தண்டை அணிந்த கால்கள், சுற்றிலும் சிரிப்பும், ஆனந்த கண்ணீரும் நிறைந்த சொந்தங்களும், நண்பர்களும்!!!. மணமகன் அறையில் காத்து கிடக்கும் நானும், என் மாலையும் அவளை சேர.....

என் காதலி எனக்கு மனைவி, இன்னும் சற்றே நேரத்தில், முதல் வார்த்தை என்ன பேச போகிறேன், என் மனைவியிடம் என்ற யோசனை என்னுள்......

“சரியான படிப்பு, சரியான வேலை, சரியான நேரத்தில் என் வாழ்க்கையை தொடங்கினேன். நல்ல பெயர், நல்ல சம்பளம் எனக்கு. எனக்கென்று வாழ்க்கையின் லட்சியமாக ஒரு வீடு, அம்மா அப்பா சந்தோஷம், தம்பி தங்கையுடன் பொழுதுபோக்கு. என் வாழ்க்கை துணையை பற்றி சற்றும் சிந்திக்காத நேரம் அது........”

“நீங்க என்ன ப்ராஜெக்ட் வொர்க்(project work) பண்ணுறீங்க” என காதலி பேசிய முதல் வார்த்தை... அப்போது எனக்கு தெரியாது, அவள் என் வாழ்வில் இத்தகைய முக்கியத்துவத்தை பெற்றிடுவாள் என்று... எனக்கு ஜுனியராக என் ப்ராஜெக்டில் பணிபுரிய வந்தாள். சொல்லிக் கொடுத்ததும் வேலையை புரிந்து கொள்ளும் திறமை அவளின் சிறப்பு. எனினும், தவறுகள் செய்து என் திட்டுக்களையும் பெற்றாள் சில நேரங்களில் (சிரிப்பு)....

“அமைதி“ என்ற சொல்லுக்கு எதிர்மறை அவள்!!! அவள் இருக்கும் இடத்தில் சிரிப்பும், சத்தமும், ஆனந்தமும் நிறைந்திருக்கும்.

“தாங்ஸ் (Thanks), சாரி (Sorry), எக்ஸ்கியூஸ் மீ (Excuse me ), ப்ளீஸ் (Please)”, அவள் பேசும் முக்கிய வார்த்தைகள்.

மற்றவர்களின் மதிப்பும், மரியாதையும் குறையாமல் மனதை புண் படுத்தாமல் மிக நேர்த்தியாக பேசுபவள். எளிமையான உடை, அணிகலன்களை கொண்ட அவளை, பேரழகி என்பதை விட மனதழகி என்பேன்.

நாட்கள் ஓடியது. அவளிடம் வேலையை பற்றி தவிர வேறு எதுவும் பேச தொடங்கவில்லை...

என் லட்சியமான வீடு கட்டுதல், ஒரு புறம் தொடங்கியது. மிக ஆழ்ந்த சந்தோஷத்தில் நானும் என் குடும்பமும்.... புது வீட்டிற்கு கிரஹப்பிரவேச நாள் குறிக்கப்பட்டது. நான் அனைவரையும் விழாவிற்கு அழைத்தேன், அவளையும் சேர்த்து.

ஒரு அழகிய மீன் தொட்டியுடன், மிகவும் சாதாரணமான வெள்ளை நிற சுடிதாரில் (Chuddar) வந்த அவளை கண்டு மெய் மறந்து போனேன். என் அருகில் வந்து கங்ராடுலேஷன்ஸ்(Congratulations) என்று மீன் தொட்டியை கொடுத்தாள். அதை பெற்று கொண்ட நான், இந்த வீட்டில் மீன் தொட்டியை எங்கே வைக்க வேண்டும் நீயே சொல் என்றேன்.

அவளும் அங்கும் இங்குமாக சென்று, சற்று யோசித்து, ஒரு இடத்தை காட்டினாள். துளியும் யோசிக்காமல், சரி என்றேன் நான்(சிரிப்பு) பெருமிதத்தில் அவள் முகம்.... மறுநாள் ஆஃபீஸில்(Office) பற்த்டே பார்ட்டி(Birthday Party) ஏற்பாடு நடைபெற்றது. யாருக்கு என்றெல்லாம் கேட்க எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. “சார் வாங்க, இன்னைக்கு என் பிறந்தநாள். எல்லாரும் கேக் கட்டுக்கு வெய்ட்(Wait) பண்ணுறாங்க, நீங்களும் வாங்க” என்ற அவள் குரல்.

அய்யோ! அவள் பிறந்தநாளை எப்படி மறந்தேன் என்று என்னை நானே மனதில் தட்டி கொண்டே கேக் கட்டுக்கு சென்றேன். அனைவரும் கிஃப்ட்ஸ், விஷ்ஷஸ்(Gifts, Wishes) சொல்லி அவளை வாழ்த்தினார்கள்.

நான் என்ன சொல்ல போகிறேன் என்று தெரியவில்லை, கையில் எந்த கிஃப்ட்டும் இல்லை. என் அருகில் வந்தாள். “சாரி, நான் கிஃப்ட் ஏதும் கொண்டு வரவில்லை“ என்றேன்.

ட்ஸ் ஓகே(It’s Okay), என்ன உங்க பைக்ல(Bike) ஒரு ரவுண்டு கூப்டு போங்க என்றாள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும், வண்டியை ஸ்டார்ட் செய்து அவளை அமரச் சொன்னேன். ஏதும் பேசவில்லை நாங்கள் இருவருமே. ஒரு ரவுண்டு சென்றோம். ஆஃபீஸில் வந்து இறங்கிய அவள், தாங்ஸ் என்று சென்றுவிட்டாள்... அந்த சில துளி பயணத்தை மனதில் வைத்துக் கொண்டு, மிகுந்த ஆனந்தத்துடன், என் பைக்கில் வீட்டை நோக்கி பயணித்து கொண்டிருந்தேன்.

சற்றும் எதிர்பாராத நொடி அது. நான் செத்துப் பிழைத்த நேரம். ஆம், என் பைக் மீது லாரி மோதியது.... ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளாக, என் சுய நினைவை இழந்தேன். மிகுந்த சிரமப்பட்டு, என் அப்பா, அம்மா மற்றும் குடும்பத்தினர் என்னையும் என் நினைவுகளையும் மீட்டனர். கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆயிற்று. அவளை எங்கே தேடி செல்ல போகிறேன், எப்போது என் காதலை சொல்ல போகிறேன் என்று என்னுள் ஆயிரம் கேள்விகள். மறுபுறம், வீட்டில் என் கல்யாண ஏற்பாடுகள். என்னை பெரும் ஆபத்திலிருந்து மீட்ட என் குடும்பத்தை எதிர்த்து, “எனக்கு கல்யாணம் வேண்டாம், இந்த பெண் வேண்டாம்” என்று மறுத்து பேச முடியவில்லை. அதே சமயம் என் முதல் காதலையும் மறக்க முடியவில்லை. என் நிலைமையை எடுத்து சொல்ல, மணப்பெண்ணிடம் பார்த்து பேச வாய்ப்பும் அமையவில்லை..
வீட்டில் கல்யாண ஏற்பாடுகள் வெகு மும்முரமாக நடைபெற்று.

மறுநாள் என் கல்யாணம். இரவு, மாடியில் பலவித யோசனைகளுடன் நின்று கொண்டிருந்தேன். “எக்ஸ்கியூஸ் மீ”, நான் கேட்டு ரசித்த அதே வார்த்தை, அதே இனிமையான குரலில். திகைத்து திருப்பி நின்றேன். என் முன்னே புது மணப்பெண். “ஹலோ” என்றேன் நானும்... எனக்கும் தூக்கம் வரவில்லை என்று பேச தொடங்கினாள்.

தன் வேலை பற்றி, தன் விருப்பு வெறுப்பான விஷயங்கள் பற்றியும் பேசினாள். என்னையும் மெய் மறந்து பேச வைத்தாள்.... நடந்த அந்த விபத்தில், என் முதல் காதல் நினைவுகளை பெற்ற நான், என் முதல் காதலியின் முகம்தனை மறந்து பல குழப்பத்திலிருந்தேன். என் மணப்பெண் பேசிய சில மணிதுளிகளில், நான் என் முதல் காதலை இந்த பெண்ணிடம் தான் உணர்ந்திருப்பேன் என்ற எண்ணம் எழுந்தது.

“நேரமாச்சி தூங்க வா மா“ என்று அவள் தாயின் குரல். சட்டென்று குட்நைட் சொல்லி விட்டு சென்றுவிட்டாள். என் இதழில் என்னை அறியாமல் புன்னகை எழுந்தது... என் மனதிற்குள் கடவுளுக்கும், என் குடும்பத்தினருக்கும் நன்றி சொல்லி கொண்டேன். என் மனதை பொறுத்தவரை, “நான் என் காதலை கண்டுக்கொண்டேன்”... இன்று, என் திருமணம் நாள். என் முதல் காதலையும், அவள் என் முதல் காதலியாகவும், நான் உணர்ந்ததை சொல்ல காத்து கொண்டிருகின்றேன், ஒரு கவிதையுடன்.

“மறுபடியும் உனக்காக நான், என்ற சொல்லுக்கு இடமே இல்லை!!! என் உயிர் பிரியும் வரை உன் ஒருவளுக்கு மட்டும் தான்”.

---


# உலகத்தமிழ்

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை வழங்கும் மின்னிதழ்

படைப்புகளில் ஒன்றாக இடம் பெற்ற சிறுகதை